Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 129/2019**

வழக்கு சாட்சி எண். PW5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இரத்தினகுமார் | கிராமம் | : | அரூர் |
| தந்தை பெயர் | : | சங்கரபாண்டியன் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 43 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி ஆஜர் இல்லை. . எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **14th Day of July 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது அரூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு. பவுலோஸ் பணிமாறுதல் சென்றதால் ஆவணங்கள் அடிப்டையில் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 05.07.2018ம் தேதியன்று காலை 7 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் குணசேகரன் என்பவர் நிலைய அலுவலில் இருந்த போது அன்பரசன் என்பவர் நிலையம் ஆஜராகி அளித்த புகாரை பெற்று அதனை பரீசலனை செய்து பார்த்ததில் அதில் முகாந்திரம் இருந்த படியால் அரூர் காவல் நிலைய குற்ற எண். 335/2018 ச/பி 279, 304(A) இதச ஆக வழக்கு பதிவு செய்துள்ளார்.

அதன் பிறகு காவல் ஆய்வாளர் திரு. பவுலோஸ் வழக்கை புலன்

விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே மாலை 7.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் கமலேஸ்பாபு மற்றும் மாது ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். புகாரானது ஏற்கனவே அசாஆ 1 ஆக குறியீடுசெய்யப்பட்டுள்ளது. பார்வை மகசர் ஏற்கனவே அசாஆ 2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. **முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆகவும், மாதிரி வரைபடம் அசாஆ-4 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.**

05.07.2018ம் தேதியன்று இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய TN 37 CQ 9541 என்ற Ashok leyland dost லாரி வாகனத்தின் ஓட்டுனர் எதிரி ராமலிங்கம் என்பவரை கைது செய்து அன்றைய தினமே எதிரியை நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை தனித்தனியாக அன்றைய தினமே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு 10.09.2018 தேதியன்று இவ்வழக்கின் சாட்சிகள் 8 முதல் 11 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

05.07.2018 தேதியன்று விபத்தில் இறந்த நபர் தமிழ்மணி என்பவரின் பிரேதத்தை அரூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று ஊர்காரர்களான செல்வம், மாரியப்பன், குமரன், சசிகுமார் மற்றும் வேலு ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை சமர்பித்துள்ளார். **மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அசாஆ-5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

05.07.2018ம் தேதியன்று விபத்தில் இறந்த தமிழ்மணி என்பவரை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் விஷால் என்பவர் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றுள்ளார். மருத்துத்துவரை விசாரணை செய்து வாக்குமூலம்

பெற்றுள்ளார். **பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ-6ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

இவ்வழக்கில் விபத்துக்குள்ளான TN 29 AT 6769 என்ற Hero honda splwnder Plus என்ற இருசக்கர வாகனத்தையும், TN 37 CQ 9541 என்ற Ashok leyland dost லாரியையும் வாகன தனிக்கைக்காக அனுப்பி வைத்துள்ளார்.

மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. பன்னீர்செல்வம் வழங்கிய மோட்டார் ஆய்வறிக்கையை பெற்றுள்ளார். மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **TN 29 AT 6769 என்ற Hero honda splwnder Plus என்ற வாகனத்தின் ஆய்வறிக்கை அசாஆ-7 ஆகவும் மற்றும் TN 37 CQ 9541 என்ற Ashok leyland dost லாரியின் ஆய்வறிக்கை அசாஆ-8 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.**

முதல் தகவல் தகவல் அறிக்கை பதிவு செய்த குணசேகரன் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

அத்துடன் புலன் விசாரணையை முடித்து எதிரி ராமலிங்கம் என்பவருக்கு எதிராக சட்ட பிரிவுகள் 279, 304 (A) இதச வாக 10.07.2018 தேதியன்று இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தை பார்த்தாக யாருடைய பெயரும் புகாரில் இல்லை என்றால் சரிதான். எதிரி தான் சம்பவத்தின் போது வானத்தை இயக்கினார் என்று யாரும் குறிபிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் புலன் விசாரணை செய்யவில்லை. வழக்கின் சாட்சிகளை நான் விசாரணை செய்யவில்லை. நான்

வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கின் விபரங்கள் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. அசா1 கொடுத்த புகாரின் மீது வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன்விசாரணை மேற்கொள்ளாமலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்காமலும், வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்திலே தயார் செய்து எதிரிகள் மீது தவறான குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அளூர்.**